


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு, முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட செல்வி. தான்யாவின் தாயார் சௌபாக்யாவுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் பாக்கம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கான சாவியினை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பானவேடு தோட்டம் கிராமத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி செல்வி.அனுசுயாவிற்கு தானியங்கி சக்கர நாற்காலியை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் செல்வி அனுசுயாவின் தாயார் ஆகியோர் உடனிருந்தனர்.

### முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட

# செல்வி தான்யா குடும்பத்திற்கு இலவச வீடு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.5-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு, முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட செல்வி. தான்யாவின் தாயார் திருமதி.சௌபாக்யா அவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் பாக்கம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கான சாவியினை வழங்கினார். மேலும், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பானவேடு தோட்டம் கிராமத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி செல்வி. அனுசுயாவிற்கு தானியங்கி சக்கர நாற்காலியை வழங்கினார்.**

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மோரை ஊராட்சி வீராபுரம் பகுதியைச் சார்ந்த திருமதி.சௌபாக்யா மற்றும் ஸ்டீபன் ஆகியோரின் மகளான செல்வி.தான்யா என்பவர் முகச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டு அவதியுற்ற நிலையில் முதல்வர் அவர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் தன்னிலை குறித்து தெரிவித்ததன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள், சிறுமி தான்யாவின் உடல் நிலையினை கருதி அறுவை சிகிச்சை செலவு முழுவதையும் ஏற்றதுடன் சிறுமி கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களின் பெற்றோருக்கு இலவச வீட்டு மனையினை வழங்கி அரசின் மூலம் வீடு கட்டித்தர ஆணையிட்டார்.

### மறுவாழ்வு அளித்த முதல்வருக்கு நன்றி!

அதனை தொடர்ந்து, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், பாக்கம் கிராமத்தில் 3 சென்ட் வீட்டு மனை அரசின் சார்பில் வழங்கப்பட்டது. மேலும், அந்த மனையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீடு கட்டி முடிக்கப்பட்டு, அவ்வீட்டிற்கான சாவியினை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திருமதி சௌபாக்யா அவர்களிடம் வழங்கினார். தனக்கு மறுவாழ்வு அளித்து இலவச வீடு வழங்கியதற்காக சிறுமி தான்யா மற்றும் அவரது பெற்றோர் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

**மாற்றுத்திறனாளி செல்வி. அனுசுயாவிற்கு அவர்களுக்கு தானியங்கி சக்கர நாற்காலி**

அதனைத் தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பானவேடு தோட்டம் கிராமத்தைச் சார்ந்த செல்வி. அனுசுயா என்னும் மாற்றுத்திறனாளி தனது உடல்நிலை குறித்து தெரிவித்து தானியங்கி சக்கர நாற்காலி வழங்கிட வேண்டி முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் செல்வி. அனுசுயாவிற்கு நேற்று தானியங்கி சக்கர நாற்காலியை வழங்கினார். அதனை பெற்றுக் கொண்ட செல்வி அனுசுயா முதலமைச்சர் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஜனவரி 21, 22 தேதிகளில் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்கிறார்!

# சிவகங்கை மாவட்டத்தில் 40 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் - முதல்வர் வழங்குகிறார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சிவகங்கை. ஜன.5-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை அரசு மன்னர் துரைசிங்கம் கல்லூரி மைதானத்தில் ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில் தமிழக முதல்வர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்ற வருகை தர உள்ளார். இதற்காக தஞ்சாவூர் பந்தல் சிவா தலைமையில் மிக பிரம்மாண்டமான பந்தல் மற்றும் மேடை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அந்தப் பணிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் மக்கள் முதல்வர் கழக தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் கதாநாயகர் அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல் மூன்றரை ஆண்டுகளாக பல்வேறு மக்கள் நலப் பணிகளை செய்து வருகிறார்.

இந்த மக்கள் நலத்திட்டங்கள் மக்களிடம் சென்றடைகிறதா என்பதை ஒவ்வொரு மாவட்டமாக நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறார். திட்டங்களில் செயல்பாடுகள் முன்னேற்றங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

அந்த வகையில் பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று தமிழக முதல்வர் அவர்கள் களப்பணியினை மேற்கொண்டார்.

அதன்படி வருகிற 21, 22 தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் செய்ய உள்ளார்கள். அரசு நிகழ்ச்சிகளுடன் கழகத்தை உருவாக்கிய இன்று வரை கழகம் உயிரோட்டமாக இருக்க காரணமான கழக நிர்வாகிகளையும், தொண்டர்களையும் சந்தித்து அவர்களுடன் கட்சி நிலைகுறித்து விவாதித்து வருகிறார்.

இரண்டு ஆய்வினையும் ஒன்றாக மேற்கொள்ளும் முதல்வர் அவர்கள் வருகிற 21 22ஆம் தேதிகளில் இரண்டு தினங்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

21ம்தேதி அன்று காலையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. குடும்பத்தாரால் கட்டப்பட்டுள்ள முற்றிலுமான தமிழ் நூலகத்தினை திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து அழகப்பாபல்கலை பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையனை திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்புரை ஆற்றுகிறார்.

அன்று மாலை 5 மணி அளவில் மாவட்ட அளவில் கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்களை காரைக்குடியில் உள்ள பி. எல்.பி. பேலஸில் சந்தித்து கட்சி செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்துகிறார்.

அன்று இரவு காரைக்குடியில் தங்குகிறார்.

மறுநாள் 22ம் தேதி காலை காரைக்குடியில் இருந்து கார் மூலம் புறப்பட்டு காலை 10 மணி அளவில் சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள திடலில் புதிதாக அமைய உள்ள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், அரசின் திட்டப்பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்துகிறார்.

விழா மேடையில் தொடர்ந்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பி பேருரையாற்றுகிறார்.

இதற்கான பணிகளை மாவட்ட நிர்வாகம் தயார் செய்து வருகிறது. இதற்கான பந்தல் அமைக்கும் பணி துவங்கி விட்டது.

முதல்வர் அவர்களை வரவேற்க சிவகங்கை மாவட்டம் தயாராகி வருகிறது.

ஆங்காங்கே கழகத் தோழர்கள் பொதுமக்கள் திரண்டு வரவேற்பு தருவதற்கு தயாராகி வருகிறார்.

பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கபட்ட கழகம் 50 ஆண்டுகள் தலைவர் கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட கழகம் தமிழர்களின் உரிமைக்காக போராடி வந்தது.

அத்தகைய தமிழர்களின் உரிமைகளை பாதுகாத்திட இன்று கழகத் தலைவர் தளபதி அவர்களால் பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் சிறப்பான முறையில் கட்சியும் ஆட்சியும் நடைபெற்று வருகிறது.

தமிழக மக்களுக்கு முதல்வர் அவர்கள் உத்திரவின் பேரில் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு பச்சரிசி, வெல்லம், கரும்பு, நெய் ஆகிய பொங்கல் பரிசு பொருட்களை பெறுவதற்கான டோக்கன் இன்று 3ம்தேதி முதல் தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றது.

கூட்டுறவுத் துறை மூலம் ரேஷன் கடை பணியாளர்கள் வீட்டிற்கு நேரடியாக சென்று வழங்கி வருகிறார்கள்.

ஒன்பதாம் தேதி முதல் இந்த பொங்கல் தொகுப்பு பொருட்கள் வழங்கும் பணி துவங்க உள்ளது. கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காக டோக்கனில் தேதி நேரம் குறிப்பிட்டு இந்த டோக்கன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

முதல்வரின் வேண்டுகோளின்படி பொதுமக்கள் அனைவரும் பொங்கல் பரிசினை பெற்று தை தமிழ் புத்தாண்டினை பொங்கல் திருவிழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பர்வீன் டோங்கரே உமேஷ், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பந்தல் அமைப்பாளர் தஞ்சாவூர் சிவா மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் இருந்தார்கள்.

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட

# விவசாயிகளிடமிருந்து கரும்பு நேரடி கொள்முதல்!

## விவசாயப் பெருமக்கள் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பயன்பெற்றிட - தமிழ்நாடு அரசு அறிவுறுத்தல்!

சென்னை, ஜன.5-

விவசாயிகளிடமிருந்து நேரடியாக கரும்பு கொள்முதல் செய்யப்படுகிறது. இணைய தளம் வாயிலாகவோ அல்லது சம்மந்தப்பட்ட இணைப்பதிவாளர்களையோ தொடர்பு கொண்டு கரும்பு விவசாயிகள் பயன் பெறலாம்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :-

முதலமைச்சர் அவர்கள் 2025-ஆம் ஆண்டில் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைச் சிறப்பாகக் கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சக்கரை மற்றும் முழுக் கரும்பு வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதன்படி, பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. மேலும், நேற்று முன்தினம் (03.01.2025) முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கான டோக்கன் விநியோகம் செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

பொங்கல் பரிசுத் தொகுப்பில் வழங்குவதற்காக கரும்பு கொள்முதல் செய்ய மாவட்ட அளவில் (சென்னை தவிர) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தலைவராக கொண்டு வேளாண்மைத் துறை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்களின் மண்டல இணைப்பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மண்டல மேலாளர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்டும், சென்னை மாவட்டத்தில் சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் அவர்களை தலைவராக கொண்டு உணவு பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் அவர்களை உறுப்பினராகக் கொண்டும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்களில் கரும்பு கொள்முதல் செய்வதற்காக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை தவிர) வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மேலாண்மை இயக்குநர் / கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் ஆகியோர் உறுப்பினராக கொண்ட வட்டார அளவிலான கரும்பு கொள்முதல் குழு மற்றும் சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் அவர்களால் உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையர், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் நிலையில் ஒரு அலுவலர், கூட்டுறவு சார்பதிவாளர் நிலையில் ஒரு அலுவலர் ஆகியோர் கொண்ட கரும்பு கொள்முதல் குழு மூலம் அந்தந்த வட்டாரங்களில் கரும்பு கொள்முதல் நடைபெற்று வருகிறது.

கரும்பு கொள்முதல், அந்தந்த மாவட்ட விவசாயிகளிடமிருந்து நேரடியாக வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்ட விவசயிகளுக்கு கரும்பு கொள்முதலில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது, மேலும், இக்குழுக்கள் மூலம் எக்காரணம் கொண்டும் இடைத்தரகர்களிடமிருந்தோ, வியாபாரிகளிடமிருந்தோ, பிற மாநிலங்களிலிருந்தோ கரும்பு கொள்முதல் செய்யப்படுவதில்லை என்பதை உறுதி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் விலை மின்னனு பரிவர்த்தனை மூலம் நேரடியாக வங்கிக்கணக்கில் செலுத்தப்படுகிறது.

விவசாயிகள் https://rcs.tn.gov.in/rcsweb/sugarcane-form என்ற இணையதள முகவரி வாயிலாகவோ அல்லது மாவட்ட வாரியாக கீழ்க்கண்ட இணைப்பதிவாளர்களை நேரடியாக தொடர்பு கொண்டு கரும்பு கொள்முதல் படிவத்தில் உரிய பதிவுகளை மேற்கொண்டு தங்கள் விளைவித்த கரும்பினை விற்பனை செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இடைத்தரகர்களோ, வியாபாரிகளோ விவசாயிகளை அணுகினாலோ, தவறான தகவல்களைப் பரப்பினாலோ கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரியலூர் - எம்.தீபா சங்கரி 73387 20200
செங்கல்பட்டு - வி. நந்தக்குமார்- 91760 01544
சென்னை - ஆர்.இந்துமதி (கூடுதல் பதிவாளர்) - 73388 50012
கோயம்புத்தூர் - எ.அழகிரி- 73387 20301
கடலூர் - கே.சி. இரவிச்சந்திரன் - 73387 20401
தர்மபுரி - கே.டி.சரவணன்- 73387 20501
திண்டுக்கல் - எஸ்.குருமூர்த்தி- 73387 20601
ஈரோடு - கே.ராஜ்குமார் - 73387 20701
கள்ளக்குறிச்சி - எஸ்.பி. முருகேசன் - 91760 01549
காஞ்சிபுரம் - பி.ஜெயஸ்ரீ - 73397 20801
கன்னியாக்குமரி - சி.எல். சிவகாமி - 73387 20901
கரூர் - பி.கந்தராஜா - 73387 21001
கிருஷ்ணகிரி - ஜி.நடராஜன் - 73387 20525
மதுரை - சு.சத்தீஷ் குமார் - 73387 21100
மயிலாடுதுறை - எ.தயாள விநாயகன் அமுல்ராஜ் - 91760 01546
நாகப்பட்டினம் - எ.தயாள விநாயகன் அமுல்ராஜ் - 73387 21201
நாமக்கல் - ஜி.பி.அருளரசு - 73387 21300
நீலகிரி - ஆர்.தயாளன் - 73387 21400
பெரம்பலூர் - எம்.தீபா சங்கரி - 73387 20216
புதுக்கோட்டை - எ.ஜீவா - 73387 21500
இராமநாதபுரம் - ஜி.ஜினு - 73387 21600
இராணிப்பேட்டை - ஜெ. மலர்விழி - 96553 46969
சேலம் - கே.ராஜ்குமார் - 73387 21700
சிவகங்கை - ஜி.ராஜேந்திர பிரசாத் - 73387 21801
தென்காசி - ஜி.நரசிம்மன் - 91760 01541
தஞ்சாவூர் - எஸ்.தமிழ்நங்கை - 73387 21900
தேனி - டி.ஆரோக்கிய சுகுமார் - 73387 22001
திருநெல்வேலி - பி.எம். முருகேசன் - 73387 22100
திருவாரூர் - கே.சித்ரா - 73387 49200
திருப்பத்தூர் - எ.பாலகிருஷ்ணன் - 73387 49701
திருப்பூர் - டி.பிரபு - 73387 20334
திருவள்ளூர் - டி.சண்முகவள்ளி - 73387 49100
திருச்சி - டி. ஜெயராமன் - 73387 49300
தூத்துக்குடி - ஆர்.ராஜேஷ் - 73387 49400
திருவண்ணாமலை - எஸ். பார்த்திபன் - 73387 49500
வேலூர் - எஸ்.திருகுண ஐயப்பதுரை - 73387 49600
விழுப்புரம் - விஜயசக்தி - 73387 49700
விருதுநகர் - பி.செந்தில்குமார் - 73387 49800
இப - பொவிதி - 1 - எம்.ஹேமா - 73387 20116
இப - பொவிதி - 2 - எஸ். லட்சுமி - 73387 20117

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கத்தில், சென்னை தென்மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் இளம் தலைமுறையினர் திராவிட இயக்க வரலாற்றை தெரிந்துகொள்ளும் வகையில் நடைபெற்ற இளம்பெண்கள் பாசறைக் கூட்டத்தை தொடங்கி வைத்து, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன், சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழகச் செயலாளருமான மயிலை த.வேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ. கருணாநிதி, தமிழரசி, திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப வீரபாண்டியன், மாநில மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் மதிவதனி, சமூக வலைதளப் பொறுப்பாளர் யாழினி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.